
SHORT STORIES TOLD BY SWAMI DAYANANDA SARASWATI (IN TAMIL)

# ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் சொன்ன சிறு கதைகள்

## – என்.அவிநாசிலிங்கம்




பதிப்பாளர் :

ஆர்ஷ அவிநாஷ் பவுண்டேசன்
104, 3வது வீதி, டாடாபாத், கோயமுத்தூர் – 641012
போன் :-+ 91 9487373635
ஈ மெயில் :- arshaavinash@gmail.com
www.arshaavinash.in

© காப்பிரைட் : என்.அவிநாசிலிங்கம்

அனைத்து உரிமைகளும் ஆசிரியருக்கே

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதி

பெற்ற பிறகு இந்த புத்தகத்தை

பாகங்களாக அல்லது முழுமையாக அல்லது

மொழி பெயர்பாக பதிப்பிக்கலாம்.

ஆசிரியரின் ஈ மெயில் – **arshaavinash@gmail.com**

இந்த புத்தகத்தை **www.arshaavinash.in** என்ற இணையதளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.

## ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் சொன்ன சிறு கதைகள்

– என்.அவிநாசிலிங்கம்

## ஒரு மாணவரின் அனுபவம்

ஒரு நாள் மாலை 6.00 மணி இருக்கும் நான் சென்னையில் காமராஜர் அரங்கம் உள்ள சாலை வழியே போய்க் கொண்டிருந்தேன். அரங்கத்தில் மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. ஒரு வேளை டிவி சீரியல் ஏதேனும் எடுக்கிறார்களோ, சினிமாக்காரர்கள் பங்கு கொள்ளும் நிகழ்ச்சியாக இருக்குமோ என்று நினைத்து ஆவலுடன் உள்ளே முண்டியடித்துக் கொண்டு போனேன். உள்ளே வரிசை வரிசையாக நாற்காலிகளில் பெரியவர்கள், இளைஞர்கள் பெண்மணிகள் உட்கார்ந்திருந்தார்கள். அதைத்தவிர நடுவில் உள்ள இடத்தில் நிறைய பேர் தரையில் அமர்ந்து இருந்தார்கள். நாற்காலிகளுக்கு பின்னால் மக்கள் கூட்டம், கஷ்டப்பட்டு எட்டிப் பார்த்தேன். நிச்சயமாக ஒரு மாயா ஜால நிகழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தேன். அங்கே மேடையில் காவி உடையில் ஒரு சந்நியாசி அமர்ந்து இருந்தார். இதென்ன இந்த சந்நியாசி பேச்சை கேட்கவா இத்தனை கூட்டம், நாமும் தான் கேட்போமே என்று அப்படியே நின்றேன். ஒரு 10 நிமிடம் பார்க்கலாம் என்று நின்ற நான், கால் கடுக்க 1 மணி நேரம் நின்று எப்படியோ ஒரு இடம் பிடித்து உட்கார்ந்து நிகழ்ச்சி முடியும் வரை இருந்தேன். வேதாந்தம் என்றால் எட்டிக்காய் என்று நினைத்து காத தூரம் ஓடிக் கொண்டிருந்த நான் ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் பேச்சு எங்கே இருந்தாலும், அதை விடாமல் கேட்கும் வழக்கமாகக் கொண்டேன். வேதாந்தம் என்பது வாழ்க்கை நெறி. அது வறட்டுப் பேச்சு அல்ல. அதனை சொல்பவர், சொல்லுகிற விதத்தில் சொன்னால் அதனால் மிகுந்த நன்மை அடையலாம் என்று புரிந்து கொண்ட எனது வாழ்க்கை பாதை முழுமையாக மாறிவிட்டது. அலுப்பு, சலிப்பு, ஏமாற்றம் என்பவை என் மனதை விட்டு ஒழிந்து விட்டன. நான் ஒரு புதிய மனிதன் ஆனேன்.

# மேதா சக்தி

வேதாந்தம் சுவாரஸ்யமற்றது, நகைச்சுவை அற்றது, கடினமான தத்துவங்கள் அடங்கியது, புரியாதது என்பது ஒரு சாமான்ய மனிதனின் எண்ணம். ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் வேதாந்தத்தை தனக்கே உரித்தான எளிய பாணியாலும், தன் நகைச்சுவை உணர்வாலும் எளிதாக்கி, நமக்கு புரியும் வரையில் ரசிக்கும்படி செய்வதில் அவருக்கு ஒருவரும் ஈடு இல்லை.

மேதா சக்தி என்பது கேட்கும் விஷயத்தை மனதில் பதிய வைத்து, அதை தக்க நேரத்தில் நினைவுக்கு கொண்டு வருவது ஆகும். வேதாந்தம், ஸமஸ்கிருத மொழி இவற்றை படிப்பதற்கும், புரிந்து கொள்ளவும் மேதா சக்தி மிகவும் அவசியம் என்பதைக் கூறும் பொழுது, ஸ்வாமிஜி சொன்னது.

" ஒருவர் தன் நண்பர் வீட்டிற்குச் சென்றார். நண்பர் அவரிடம் "ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை எனக்கு அனுப்ப முடியுமா?" என்று கேட்டார். இவர் " கண்டிப்பாக அனுப்புகிறேன்" என்று வாக்களித்தார். அவர் தன் ஞாபகத்திற்காக அங்கவஸ்திரத்தில் ஒரு முடிச்சும் போட்டுக் கொண்டார். மூலையில் ஒரு முடிச்சுப் போட்டுக் கொள்வதால் அந்த முடிச்சைப் பார்க்கும் பொழுதெல்லாம் எதற்காக முடிச்சு போட்டோம் என்பது நினைவிற்கு வரும் என்று நினைத்தார்.

இவர் தன் வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகு முடிச்சைப் பார்க்க நேர்ந்தது. எரிச்சலுடன் " யார் இந்த முடிச்சைப் போட்டது?" என்று சத்தமாகக் கேட்டார். அவருடைய மனைவி " உங்கள் நண்பர் வீட்டிற்கு சென்றிருந்த பொழுது ஏதேனும் ஒரு விஷயத்தை நினைவு கூர்வதற்காக முடிச்சைப் போட்டிருக்கலாம் என்று கூறினார்." அவர் நிறைய நேரம் அது பற்றி சிந்தித்தார். அதன் பின் " நான் எதற்காக இந்த முடிச்சைப் போட்டேன்?" என்று மனைவியை மறுபடியும் கேட்டார். மனைவியோ " எனக்கு எப்படித் தெரியும்? நீங்கள் தானே போட்டீர்கள்? " என்று பதிலளித்தார். இவர் தன் நண்பர் வீட்டிற்கே திருப்பச் சென்று" நான் இங்கே இன்று காலை வந்த பொழுது இந்த முடிச்சைப் போட்டேன். அது எதற்காக என்று சொல்லேன்? என்றார்.

நண்பர், " நீ காலையில் இங்கே வந்தாயா என்ன? " என்று அவரை திருப்பிக் கேட்டார். என்ன ஒரு மேதா சக்தி இருவருக்கும் என்று முடிப்பார். கூட்டத்தில் சிரிப்பலை அடங்க பல நிமிடங்கள் ஆகும். மேதாசக்தி என்பதை விளக்க இப்படி ஒரு கற்பனைக் கதையை கூறுவார்.

## சமாதி

சமாதி என்ற நிலையில் எந்த சிந்தனையும் இருக்காது. மனதும் செயல்படாமல், எந்த எண்ண ஓட்டமும் இல்லாமல் இருக்கும். ஏனெனில் மனது என்பது இடைவெளி இல்லாமல் விதவிதமான எண்ணங்களின் ஓட்டம் என கூறப்படுகிறது. எண்ணங்கள் தான் பிரச்சினைகளுக்கு காரணம் என்று நினைப்பதால், மனதை குற்றம் சாட்டுகின்றனர் என்று ஸ்வாமிஜி கூறுவார். இது எப்படி இருக்கிறது என்றால் "தலைவலியா? தலையை வெட்டி விடு. அப்புறம் எப்படி தலை வலி வரும்" என்பது போல் உள்ளது என்று கூறி கூடவே வேடிக்கையான ஒரு கதையும் கூறுவார். ஒரு மீனவப் பெண்மணி 12 வயது கடந்த தன் மகன் இறந்து விட்டான் என்று வருந்தி அழுதாள். ( நாகர்கோவில் பக்கங்களில் புத்தியை பித்தி என்பார்கள்) "ஐயோ, பித்தி செத்தல்ல போனான். (அவன் புத்திசாலி இறந்து விட்டானே என்று பொருள்) "பித்தி அல்லோ பித்தி. அவன் அம்மாவை அம்மா என்று சொல்வான். அப்பாவை அச்சனென்று என்று சொல்வான். பானையிலுள்ள மீனை எனக்கு காண்பிப்பான். அப்பொழுது அவன் கண்களில் ஆசைமின்னும். (அவனுக்கு மீன் என்று சொல்ல வராது). பித்தி அல்லோ பித்தி. செத்தல்ல போனான்" என்று அழுவாள்.

யாரெல்லாம் எண்ணங்களை எல்லாம் வராமல் செய்து விட்டு சமாதி நிலை அடைய வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்கள் மீனவப் பெண்ணின் பையன் போன்று புத்திசாலிகள் தான். எல்லா பிரச்சனைகளுக்கும் எண்ணங்கள் தான் காரணம். ஆகவே அவற்றை தவிர்ப்பதே பிரச்சனையின்றி வாழ வழி வகுக்கும் என்பது தவறு. எண்ணமில்லாத நிலை, சமாதி அல்ல என்ற உண்மையை தெளிவாக இவ்வாறு நகைச்சுவையுடன் எடுத்துரைப்பார்.

## சிருஷ்டி

பிரம்மன் என்பது இருப்பைக் ( existence) குறிக்கிறது. சிருஷ்டி என்பது இந்த பிரம்மம்மே பலவாக, உலகமாக தோற்றம் அளிப்பது ஆகும். இந்த வேதாந்த தத்துவத்தை விளக்க ஸ்வாமிஜி இந்த கதையை சொல்லுவார்.

பழைய காலத்தில் கிராமங்களில் விருந்தோம்பல் என்ற நடைமுறை இருந்தது. தினமும் பகல் உணவிற்கு முன் வீட்டுக்காரர் வீட்டிற்கு வெளியே வந்து சப்தமாக " சாப்பிடுவதற்கு யாரேனும் இருக்கிறீர்களா? என்று கேட்பார். யாரேனும் அக்குரல் கேட்டு "எனக்கு பிக்ஷை வேண்டும்" என்று வந்தால் அவர்களுக்கு உணவு அளித்து அனுப்புவார். இதுவே அதிதி பூஜை, விருந்தோம்பல் என்று அழைக்கப்பட்டது. இதனை அனைவரும் செய்ய வேண்டும் என்பது நியதி.

ஒரு கிராமத்தில் மனைவியை இழந்த ஒருவர் இருந்தார். அவருக்குக் குழந்தைகளும் கிடையாது. நிலமும் கிடையாது. அவர் தினமும் நதியில் நீராடி பூஜைகள் முடித்து, பிக்ஷை யாரெனும் கொடுத்தால் சாப்பிடுவார். தினமும் ஒரே வீட்டில் சாப்பிடக் கூடாது, என்பதால் வேறு வேறு வீட்டுக்குச் செல்வார். அந்த கிராமத்தில் 25 வீடுகள் இருக்கும். அவர் அந்த வீடுகளில் ஒரு வீடு தவிர, பாக்கி எல்லா வீட்டிலும் சாப்பிடுவார். அந்த ஒரு வீட்டில் வாழ்ந்த குழந்தைகள் அற்ற தம்பதிகள் படு கருமிகள். அவர்கள் தங்கள் இருவருக்கு மாத்திரம் சிறிய பானையில் சமைப்பது வழக்கம். ஆனால் கிராமத்து வழக்கப்படி அந்த வீட்டுக்காரரும் சாப்பிடுவதற்கு முன் வெளியே வருவார். யாருமில்லை என்பது தெரிந்த பின், "யாராவது பிக்ஷைக்கு இருக்கிறீர்களா?" என்று வேகமாகக் கேட்டுவிட்டு உள்ளே சென்று விடுவார். ஒரு நாள் அதே மாதிரி அவர் வேகமாக பிக்ஷைக்கு "யாரேனும் இருக்கிறீர்களா?" என்று கேட்ட போது அதற்காகவே பக்கத்து சந்தில் காத்துக் கொண்டிருந்த அந்த ஏழை பிராமணர் பக்கத்து சந்திலிருந்து ஓடி வந்து, "நான் இருக்கிறேன்" என்று கூறினார். அந்த வீட்டுக்காரருக்கு விருந்தாளியை உள்ளே கூப்பிட்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. உள்ளே அழைத்தார்.

அவர் தன் மனைவியிடம் விருந்தாளி வந்திருக்கிறார் என்று சொன்னவுடன் அவள் விருந்தாளிக்கு அன்னமிட ஒப்புக் கொள்ளவில்லை. வீட்டுக்காரர் " வேறு வழியில்லை, விருந்தாளி வந்து விட்டார், நாம் அவருக்கு உணவு அளிக்காவிடில் கிராமத்தில் நம்மை தள்ளி வைத்து விடுவார்கள்" என்று வாதாடினார். அவள் விருந்தாளியை துரத்துவதற்கு ஒரு திட்டம் தீட்டினாள்.

ஒரு பிராமணர் அல்லது சந்நியாசி, கணவன் மனைவி சண்டை போட்டுக் கொள்ளும் வீட்டில் சாப்பிடக் கூடாது என்ற நியதி இருந்தது. அதைப் பயன்படுத்தி இருவரும் சண்டை போடுவது போல் நடிக்கத் தீர்மானித்தனர். கணவன் மனைவியைப் பார்த்து சத்தம் போட்டார். மனைவி திரும்ப சத்தம் போட்டாள். கணவன் வாழைப்பட்டையை தரையில் அடித்து, மனைவியை அடிப்பது போல் சத்தம் செய்தார். மனைவியும் அழுவது போல் பெரிதாக சப்தம் போட்டு அழுதார்.

இந்த நாடகம் உள் அறையில் 10 நிமிடம் நடந்தது. அதன் பின் இருவரும் வெளியே வந்தனர். விருந்தாளியைக் காணவில்லை. இருவரும் சந்தோஷமாக இலையைப் போட்டு பரிமாறிக் கொண்டனர். கணவன் சிரிப்போடு " நான் எப்படி அடிக்காமல் அடித்தேனே" என்றார்.மனைவியும் "நான் எப்படி அழாமல் அழுதேனே" என்று சொன்னாள். அச்சமயம் பரண்மேல் உட்கார்ந்திருந்த விருந்தாளி கீழே குதித்து " நான் எப்படிப் போகாமல் போனேனே" என்று சொல்லி விட்டு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாராம். கதை முடிந்தவுடன் அரங்கம் இடிந்து விழுவது போன்று மக்கள் சிரிப்பார்கள்.

விருந்தாளி போகாமல் எப்படி போனானோ அம்மாதிரி பிரம்மனும் பலவாறாக ஆகாமல், பலவாறாகத் தோற்றமளிக்கிறது. பிரம்மனிலிருந்து இந்த உலகம் முழுவதையும் எடுத்து விட்டாலும், அது முழுமையாகவே இருக்கும். ஆகவே எல்லாமே வெறும் தோற்றம் தான். சத்யம் என்ற நிலையிலிருந்து பார்த்தால் இவை எல்லாம் தோற்றமே, உண்மையல்ல என்று ஸ்வாமிஜி விளக்குவார்.

## ஸ்வர்கம் செல்வது

ஸ்வர்கத்திலும் கூட ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஸ்வர்கத்திற்கு சென்றாலும் நாம் வருத்தத்துடன் இருக்க வாய்ப்புண்டு. ஸ்வர்கத்திற்கு போவது என்பது ஒரு சுற்றுலா அல்லது உல்லாச பயணம் செல்வது போன்றது தான். திரும்ப இந்த பூமிக்கு வந்தாக வேண்டும். முன்போலவே ஏற்றத் தாழ்வுடன் வாழவேண்டும். ஆகவே ஒருவன் தன் ஸ்வரூபத்தை அறிவதன் மூலமே வருத்தமின்றி வாழ முடியும், பிறவிகளற்ற நிலையையும் அடையமுடியும் என்னும் உண்மையை விளக்குவதற்காக நகைச்சுவை மிக்க மற்றும் ஓர் கதையைக் கூறுவார்.

ஒரு ராமாயணப் பண்டிதர், ராமாயண கதையை பல இடங்களில், பலமுறை எடுத்துக் சொன்னதால் ஸ்வர்க்கம் சென்றார். ஸ்வர்கத்தில் அவருக்கு அழகிய தோட்டம், வாஹனம், வேலைக்காரர்கள் கூடிய மாளிகை ஒதுக்கப்பட்டது. ஆஹா பம்பாய் டெல்லியில் நாம் வாழ்ந்த பொந்து மாதிரியான வீட்டை விட இது எவ்வளவு நன்றாக இருக்கிறது. ராமாயணம் சொன்னதற்கு இத்தனை புண்ணியமா என்று அவர் சந்தோஷமாக இருந்தார். ஆனால் பாவம் அவர் பக்கத்து வீட்டை எட்டிப் பார்க்கும் வரை தான் சந்தோஷம் நிலைத்தது. பக்கத்து வீடு இவருடையதைப் போல் 2 பங்கு பெரியது, பெரிய தோட்டம், நிறைய வேலைக்காரர்கள், 2, 3, வாகனங்கள் ஆஹா! இந்த வீட்டுகாரர் ராமாயண கதை

மாத்திரமல்ல, பாகவதக் கதையும் சொல்லியிருக்க வேண்டும். அதிக புண்ணியத்தின் பலனை அனுபவிக்கிறார் என்று நினைத்தார். ஆனால் அந்த வீட்டிற்குள் சென்றபோது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவருக்கு டெல்லியில் பக்கத்து வீட்டுக்காரனாக இருந்த பட் – பட் வாஹன ( ஆட்டோ ரிக்ஷா மாதிரியானது) ஓட்டி தான் அங்கு குடியிருந்தான். டெல்லியில் அவன் வாஹனம் தாக்கி பல பேர் இறந்தனர்.

ராமாயண சொற்பொழிவாளருக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. நேராக இந்திரனிடம் சென்றார். இந்திரா இது என்ன தெய்வ தீர்ப்பு! நான் ராமரைப் புகழ்ந்து வருடக் கணக்கில் பேசி வந்திருக்கிறேன். அந்த புண்ய பலனை அனுபவிக்க இங்கு வந்துள்ளேன். இந்த ரிக்ஷா ஓட்டுபவன் எப்படி இங்கு வந்து சுகபோகங்களை அனுபவிக்கலாம்? அவனுக்கு என்னைப் போன்று 2 பங்கு பெரிய வீடு, தோட்டம் முதலியவை வேறு. அவன் ராமாயணம் கேட்டது கூட இல்லையே. என்று அழாத குறையாகக் கேட்டார். இந்திரன், கோபப்படாதீர்கள் சாஸ்திரியாரே. நீங்கள் ராமரின் பெருமைகளை சொல்லிய பொழுது வயதானவர்கள் அதைக் கேட்டார்கள். கூட்டத்தில் பலர் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கேட்பவர்கள் ஏற்கனவே ராம பக்தர்கள். ஆனால் அந்த பட் – பட் வாலா கடவுள் நம்பிக்கை அற்றவர்களையும் பக்தர்களாக மாற்றினான். எப்படியெனில் அவன் பட்–பட்டை வேகமாக ஓட்டும் பொழுது பயணிகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு "கடவுளே என்னைக் காப்பாற்றுங்கள்" என்றும், இறங்கிய பின் கடவுளுக்கு நன்றி சொல்பவர்களாகவும் மாறினார்கள். இப்படியாக அவன் பலபேரை நிரந்தர பக்தர்களாக மாற்றிய பெருமை உடையவன். அதனால் தான் இங்கு இருக்கிறான் என்றார். இக்கதையை கேட்பவர்கள் வயிறு வலிக்க சிரிப்பார்கள். சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசையையும் துறப்பார்கள்.

## கர்ம யோகம்

கர்மயோகத்தைப் பற்றி கூறும் பொது ஸ்வாமிஜி " பலனை எதிர் பார்க்காதே கடமையை செய்" என்பது தான் கர்மயோகம் என்று கேட்டிருக்கிறோம். இதென்ன முடிகிற காரியமா? பலனை எதிர்பார்க்காமல் யார் தான் வேலை செய்வார்கள்? செயல் புரிய வேண்டும் என்ற உந்துதல், பலன் வேண்டும் என்ற விருப்பத்தினால் தானே ஏற்படும்? என்று விளக்கி ஒரு சம்பவத்தை குறிப்பிடுவார்.

நான் சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஒரு மனநல சிகிச்சை மையத்திற்கு ( சும்மா, பார்க்கத்தான்) போனேன். அங்கே ஒருவர் ஓர் மரத்தடியில் நின்று உரத்த

குரலில் பேசிக் கொண்டிருந்தார். அவர் தன் எதிரே ஒரு பெரிய மக்கள் கூட்டம் இருப்பதாக ( கற்பனையில்) நினைத்து அவர்களைப் பார்த்து குரலைக் கிழித்துக் கொண்டு சொன்னார்" எல்லோரும் கவனியுங்கள். என்னைக் கடவுள் கீழே அனுப்பியுள்ளார். உங்கள் அனைவரையும் நீங்கள் செய்த பாவங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக நான் வந்திருக்கிறேன். நீங்கள் பாவத்திலிருந்து விடுபடாவிடில் நரகத்திற்கு செல்ல வேண்டும். அந்த நரகத்தில் நிரந்தரமாக நீங்கள் இருக்க வேண்டியது தான். அங்கு தாங்க முடியாத உஷ்ணமாக இருக்கும். யாரெல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமோ அவர்கள் கை தூக்கவும்" பிறகு அவன் எல்லா பக்கமும் பார்த்து நிறையப் பேர் கை தூக்கிய மாதிரி பாவனை செய்து " நன்றி, நன்றி நான் உங்களிடம் பிறகு பேசுகிறேன்" என்று கூறினான்.

எனக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனால் நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் எங்கு இருக்கிறோம் என்று எனக்கு நன்றாகவே நினைவிருந்தது. அப்போது சொர்க்கத்திலிருந்து (மரத்தின் மேலிருந்து) " நான் தான் கடவுள் பேசுகிறேன். நான் இந்த ஆளை அனுப்பவேயில்லை. அவன் கூறுவதை நம்பாதீர்கள்" என்று ஒரு குரல் கேட்டது.

"பைத்தியக்காரன் கூட தன் வார்த்தைகளை எல்லோரும் நம்மவேண்டும் என்ற பலனை எதிர்பார்க்கிறான். எப்படி நல்ல புத்தி ஸ்வாதினமுள்ள நாம் பலனை எதிர்பார்க்காமால் காரியம் செய்ய முடியும்?" என்று ஸ்வாமிஜி கேட்டார். கேட்பவர்களுக்கு கர்ம யோகம் என்பது பலனை எதிர்பார்க்காத நிலை அல்ல. எல்லா பலனையும் இறைவனின் பிரசாதமாக ஏற்றுக் கொள்ளும் நிலை என்று புரிய வைப்பார்.

## <u>அத்வைதமும் துவைதமும்</u>

துவைதத்தை அறிவதற்கு குருவோ, ஆழ்ந்த படிப்போ தேவையில்லை. ஏனெனில் அது மக்களின் சுபாவமாக உள்ளது. அத்வைதத்தை அறியத்தான் தீவிரமான படிப்பு தேவை என்பதை ஒரு சுவையான கதை மூலம் ஸ்வாமிஜி விளக்குவார்.

ஒரு கிராமத்தில் இரண்டு ஆசிரியர்கள் இருந்தனர். ஒருவர் அத்வைதமும் இன்னொருவர் த்வைதமும் கற்பிப்பவர். அத்வைத குருவிற்கு ஒரு சிஷ்யன் வந்தார். சில நாட்கள் படித்த பின் அத்வைதம் சரியென்று அவருக்குப் படவில்லை. த்வைத குருவின் போதனையில் ஈர்க்கப்பட்டான். அவரிடம் சென்று 12 வருடம் சாஸ்திரங்களை, தர்க்க நூல்கள், இலக்கணம் இவற்றின் உதவியோடு படித்து

முடித்த பிறகு தனது பழைய அத்வைத குருவை வாதத்திற்கு இழுத்து தோற்கடிக்க வேண்டுமென்ற ஆவலுடன் அவருடைய வீட்டை அடைந்தான். அந்த சமயம் குரு தன் முக க்ஷவரத்திற்காக முராரி என்ற ஷவரத்தொழிலாளியின் முன் உட்கார்த்திருந்தார். சிஷ்யர் தான் வந்த காரியத்தைச் சொன்னார். குரு அவரை காத்திருக்கச் சொன்னார். முராரி தன் வேலையை நன்கு முடித்தான். அவன் அவருடைய தாடி, தலையில் உள்ள முடி அனைத்தையும் களைந்தான். அதன் பிறகு கண்ணாடியை எடுத்து அவருக்கு காட்டினான். அந்த குரு நீண்ட ஜடை, முகத்தையே மூடியிருந்த தாடி முதலியவை மறைத்திருந்த பளபளப்பை, தேஜஸை முராரி வெளிக் கொண்டு வந்திருக்கிறான் என்பதால் குரு " நீ இந்த தேஜஸை எனக்குக் கொடுத்ததால் நீயே ஸ்ரீமான் நாராயணன்" என்று சொல்லி அவனுக்கு ஒரு நமஸ்காரமும் செய்தார். சிறந்த அறிவாளியான, பண்டிதர் தனக்கு நமஸ்காரம் செய்ததால் அதிர்ச்சி அடைந்த முராரி தன் கால்களை பின்னுக்கு இழுத்துக் கொண்டு, அவருக்கு திரும்ப நமஸ்கரித்து விட்டு பண்டிதரே, நான் ஒன்றுமறியாத பாமர தொழிலாளி நான் எப்படி ஸ்ரீமான் நாராயணனாக ஆக முடியும்? அவர் எங்கும் நிறைந்தவர். எண்ணற்ற வீபூதிகளை தன்னகத்தே கொண்டிருப்பவர். நான் என்றுமே எல்லைகளற்ற அந்தப் பரம்பொருளாக முடியாது. நான் இந்த உடல், மனம் என்ற கூட்டுக்குள் அடைப்பட்டிருப்பவன் என்று கூறிவிட்டு சென்று விட்டான். பண்டிதர் பூ, பழங்கள், தக்ஷிணை இவற்றுடன் காத்திருக்கும் பழைய சிஷ்யனைப் பார்த்தார். அந்த சிஷ்யன் அந்தப் பொருள்களை அவரிடம் கொடுத்து நமஸ்கரித்து தன்னை, மறுபடியும் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கூறினான்.

நான் எல்லைகளுக்குட்பட்டவன். நான் வேறு ஸ்ரீமான் நாராயணன் வேறு என்று முராரி கூட அறிந்திருந்த உண்மையை அறிவதற்காகவா 12 வருடம் படித்தேன்? எப்படி எல்லைகளற்ற பரம்பொருளும் நானும் ஒன்றுதான் என்று சொல்லும் அத்வைதத்தை அறிவதற்கல்லவா படிக்க வேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் அவனுக்கு புரிந்தது!

## <u>ஒரு கடவுளா? பல கடவுள்களா?</u>

( பூஜ்ய சுவாமிஜி அவர்கள் வாழ்நாளில் நடந்த ஸ்வாரஸ்யமான நிகழ்ச்சி)

ஸ்வாமிஜி மதப் பிரச்சாரம் செய்யும் கிருஸ்துவர்களை எப்படி எதிர்கொள்வது என்பதை சுவையான நிகழ்ச்சி ஒன்றால் விளக்குவார்.

ஸ்வாமிஜி டெல்லியிலிருந்து சென்னைக்கு ஒருமுறை ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடன் மற்றும் இருவர் பிரயாணம் செய்தனர். இம்மூவரையும்

வரிசைப்படுத்தி பயணி 1, பயணி 2, மற்றும் பயணி 3 (ஸ்வாமிஜி அவர்கள்) என்று வைத்துக் கொள்ளலாம்.

பயணி 2 – என்ன படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

பயணி 1 – கீதை படிக்கிறேன்.

பயணி 2 – கீதை என்றால் என்ன?

பயணி 1 – அது ஒரு சாஸ்திர நூல்

பயணி 2 – அது என்ன சாஸ்திரம்? யார் எழுதியது?

பயணி 1 – ஸ்ரீ கிருஷ்ணர் எழுதியது.

பயணி 2 – கிருஷ்ணரா? அது யார்?

பயணி 1 – அவர் எங்கள் கடவுள்.

பயணி 2 – ராமர் என்பவர் யார்?

பயணி 1 – ராமரும் கடவுள் தான்

பயணி 2 – சிவன் என்பவர் யார்?

பயணி 1 – சிவனும் எங்கள் கடவுள் தான்.

பயணி 2 – அப்படியானால் கணேசர்?

பயணி 1 – அவரும் கடவுள் தான்.

பயணி 2 – தேவி என்பது?

பயணி 1 – தேவியும் கடவுள் தான்.

பயணி 2 – உங்களுக்கு எத்தகை கடவுள்கள்?

பயணி 1 – எங்களுக்கு நிறையக் கடவுள்கள் உண்டு.

( பயணி பகவத் கீதையை புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார். அவரை அந்த மத போதகர் விடாது கேள்வி கணைகளால் துளைத்துக் கொண்டிருந்தார்)

பயணி 2 – அநேக கடவுள்களை வணங்கும் உங்களுக்கு குழப்பம் ஏற்படாதா?

பயணி 1 – இல்லை அப்படி ஆகாது.

பயணி 2 – நீங்கள் நிச்சயமாக குழப்பமடைவீர்கள் என்று நம்புகிறேன்.

பயணி 1 – இல்லை நான் குழப்பமடையவில்லை எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

பயணி 2 – நான் சொல்லுவதைக் கேளுங்கள். ஒரு சமயம் ஒரே இடத்திற்குச் செல்லும் 2 பயணிகள் சந்தித்தனர். அவர்கள் நண்பர்கள் ஆனார்கள். அவர்கள் போகும் வழியில் ஒரு நதி குறுக்கிட்டது. இருவருக்கும் நீச்சல் தெரியாது. நதியில் அதிக நீர் இல்லாததால் அதை நடந்து கடந்து விடலாம் என்று இறங்கி நடந்தனர். நதியில் திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. அவர்களால் முன்னும் போக முடியவில்லை. பின்னும் போக முடியவில்லை. நீரின் மட்டம் உயர்ந்து கொண்டே வந்து மார்பளவு வந்துவிட்டது. ஒருவர் ஓ ராமா, ராமா என்று உரக்கக் கூவினார். அதன் பிறகு ஹரே கிருஷ்ணா என்று கூப்பிட்டார். ராமா என்ற குரல் கேட்டு வந்த ராமர், கிருஷ்ணா என்ற குரல் கேட்கவும் தன்னைக் கூப்பிடவில்லை என்று நினைத்து திரும்பி விட்டார். கிருஷ்ணா என்ற குரல் கேட்டு கிருஷ்ணர் வரும் சமயம் இவர் 'ஓ மஹாதேவா' என்று கத்தவும் கிருஷ்ணரும் திரும்பி விட்டார். சிவன் தன்னைக் கூப்பிடுகிறாரே என்று வரும் போது இவர் "கணேசா" என்று கூக்குரலிடவும் சிவன் திரும்பிப் போய் விட்டார். கணேசர் தன் வாஹனத்தில் மெதுவாக வருவதற்குள் பயணி நீரில் மூழ்கி இறந்து விட்டார். ஆனால் அவருடைய நண்பரோ " ஓ ஏசுவே' என்னைக் காப்பாற்றுங்கள் என்று சத்தமிடவும் நதியில் ஒரு கட்டை மிதந்து வந்தது. அவர் அதைப்பிடித்துக் கொண்டு கரையை அடைந்தார். இப்பொழுது புரிகிறதா குழப்பத்தின் காரணம்? ( கீதை படித்துக் கொண்டிருந்த ஹிந்துவிற்கு நிஜமாகவே குழப்பம் ஏற்பட்டு விட்டது)

பேசி முடித்தவுடன் அந்த மத போதகர் 3–வது பயணி ஆகிய நமது ஸ்வாமியைப் பார்த்தார்.

ஸ்வாமிஜி :- ஆஹா பிரமாதம். நல்ல சுவாரஸ்யமான கதை

போதகர் :- ஆமாம். ஆமாம்.

ஸ்வாமிஜி:- நீங்கள் கூறிய நிகழ்ச்சி எப்பொழுது நடந்தது?

மத போதகர் விடையை யோசித்துக் கொண்டிருந்தார்.

ஸ்வாமிஜி :- ஒரு வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடந்ததாக வைத்துக் கொள்ளலாம்?

போதகர் :- ஓ வைத்துக் கொள்ளலாம்.

ஸ்வாமிஜி:- உலகிலே எத்தனை உங்கள் மத நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கிறார்கள்.

போதகர்:- லக்ஷோப லக்ஷம் ஜனங்கள்.

ஸ்வாமிஜி :- நான் சொல்ல போகும் நிகழ்ச்சி நடந்தால் என்ன நடக்கும் என்று சொல்வீர்களா? அந்த 4 மணிக்கு பாரீஸ் நகரில் ஒருவர் காரில் அடிபட்டு சாகும் நிலையில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் " ஓ ஏசுவே காப்பாற்றுங்கள்" என்று கதறுகிறார். அதே நேரத்தில் லண்டனில் ஒருவரை மற்றொருவர் கத்தியால் குத்தி விடுகிறார். அவர் ஓடுகிறார். ஓடும் அவரை துரத்தி பிடித்தும் விடுகிறார். அவர் ஏசுவே என்னைக் காப்பாற்றுங்கள் என்று கூக்குரலிடுகிறார். ஜோஹனஸ்பர்க்கில் ஒரு மருத்துவமனையில் கர்ப்பிணி பெண் என்னை பேறு கால வலியிலிருந்து காப்பாற்றுங்கள் ஏசுவே" என்று கதறுகிறார். நீங்கள் சொன்னீர்களே அந்த இந்தியரும் ஏசுவே என்னை வெள்ளத்திலிருந்து காத்தருளுங்கள் என்று இறைஞ்சுகிறான். ஏசுபிரான் எந்த இடத்திற்கு செல்வார்? எல்லொரும் விசுவாசிகள்.

ஆனால் எங்களுக்கு ( ஹிந்துகளுக்கு) பிரச்சினை இல்லை. கணேசர் ஒருவனை காப்பாற்றவும், சிவன் மற்றொருவரிடமும், கிருஷ்ணர், ராமர் ஆகியோர் வேறு நபர்களையும் காப்பாற்றப் போவார்கள்.

இறைவன் ஒருவரை காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தால் அந்த இடத்திற்கு போக வேண்டிய அவசியமில்லை. இருந்த இடத்திலிருந்து அனைவரையும் காப்பாற்ற முடியும். ஒருவர் ராமா என்றழைத்தாலும், மற்றொருவர் கிருஷ்ணா என்று அழைத்தாலும் குழம்ப மாட்டார்.

சுப்பிரமணியன் என்று பெயர் கொண்ட சாதாரண மனிதன் ஒருவரை "சுப்பு, சுப்பிடு, மாமா, அப்பா, என்னங்க" என்று எப்படி கூப்பிட்டாலும் அவர் என்னவென்று கேட்கிறபோது கடவுளுக்கு வெவ்வேறு பெயர்கள் தன்னையே குறிப்பிடுகின்றன என்று தெரியாதா என்ன?

இதைக் கேட்டு அரங்கமே அதிரும்படி மக்கள் சிரிப்பார்கள். மக்கள் மனதில் எல்லா கடவுள்களும் ஒரே பரம்பொருளை குறிக்கின்றன என்ற தத்துவத்தை உணர்த்துவார். அதேசமயம் விதண்டாவாதம் செய்கிறவர்களை எப்படி வாயடைக்க செய்வது நமது கடமை என்பதையும் இதன் மூலம் உணர்த்துவார்.

## துணியே சட்டை

ஒரு சட்டையை அது நூல்களால் ஆகியது என்பதை அறிய இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அதனை கிழித்து நூல்களைத் தனியே பிரிதெடுப்பது. மற்றொன்று சட்டையை கிழிக்காமல் அது நூல்களால் ஆனது என்பதை ஞானத்தால் அறிவது. சட்டையை பற்றிய உண்மையை ஞானத்தால் அறிவது எளிமையான வழி. ஒரு விஷயத்தை அறிவதற்காக கண்ணோட்டம் மாற்றிக் கொள்வதன் மூலம் தெளிவான முறையில் ஒரு விஷயத்தைப் பற்றி அறியலாம். எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தால் வேதாந்த உண்மைகள் புரியுமோ அந்தக் கோணத்திற்கு நம் பார்வையைத் திருப்ப வேண்டும் என்பதை விளக்க ஸ்வாமிஜி கீழ்கண்ட கதையை கூறுவார்.

ஒரு பணக்காரனுக்கு 2 மகன்கள் முதல் மகன் சற்று மந்த புத்தியுடையவன். அவனால் செல்வத்தை கட்டிக் காக்க முடியாது என்ற காரணத்தால், 2 வது மகன் சொத்துகளை நிர்வகிக்க ஏற்றவன் என்று தந்தை நினைத்தார். ஆனால் அப்படி சொத்துகளை இளைய மகன் நிர்வாகிக்க வேண்டும் என்று தீர்மானித்தால் இருவருக்கிடையில் மனஸ்தாபம் வரும் என்று நினைத்தார். ஒரு திட்டம் தீட்டினார். இருவரையும் கூப்பிட்டு சொன்னார். " உங்களில் ஒருவர் நமது சொத்துக்களை நிர்வாகிக்க வேண்டும். இன்னொருவர் மாடுகள் மேய்த்தல் போன்ற செயல்களைச் செய்ய வேண்டும். இந்த சொத்து முழுவதும் என்னுடைய சொந்த முயற்சியால் ஈட்டப்பட்டதால் அது முழுவதும் தர்மத்திற்கு எழுதிவைக்கலாம். இருவருக்கும் கொடுக்கலாம், அல்லது ஒருவருக்குக் கொடுக்கலாம். என் இஷ்டப்படி செய்ய எனக்கு உரிமை உண்டு இருவரும் தந்தை சொன்னதை ஒப்புக் கொண்டனர். தந்தை ஒவ்வொருவரிடமும் ரூ.5000/–யை கொடுத்தார். இதனைக் கொண்ட ஒவ்வொருவரும் நான் குறிப்பிடும் வீட்டினை நிரப்ப வேண்டும். 3 நாள் அவகாசம் தருகிறேன் என்றார். ஒரு நடுவர் குழு சிறந்த நிர்வாகியைத் தேர்ந்தெடுக்கும் என்றும் கூறினார்.

3 நாள் கழித்து நடுவர் குழு பணக்காரரின் மூத்த மகனுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு சென்றனர். வீடு முழுவதும் வைக்கோலால் நிரப்பப்பட்டிருந்தது. நான் வீட்டை மட்டுமல்ல, மாட்டுத் தொழுவத்தையும் நிரப்பி விட்டேன் என்று பின்னால் கட்டப்பட்டிருந்த 2 கிழ மாடுகளையும் காண்பித்தான்.

அடுத்து, இளைய மகனுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டிற்குச் சென்றனர். வீடு நல்ல வெளிச்சமாக இருந்தது. ஜன்னல்கள் திறந்திருந்தன. வாசலில் அழகான கோலம் அவர்களை வரவேற்றது. உள்ளே ஒன்றிரண்டு நாற்காலிகள், காணப்பட்டன. சமையலறை சுத்தமாக இருந்தது. உள்ளே பால் காய்ந்து கொண்டிருந்தது. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் இருந்தன. சாப்பாட்டு மேசை, அதில் தட்டுகள் முதலியவை, படுக்கையறை, இருந்தது. எல்லாமே எளிய முறையில் ஆனால் சுத்தமாகவும் அழகாகவும் இருந்தன. வீடு நிறைந்திருந்த மாதிரி உணர்வு தோன்றியது. பக்கத்தில் வாழும் வீடுகளிலிருந்து குழந்தைகள் வந்திருந்தன. அங்கே ஒரு அறையில் கடவுளுக்கு ஒரு இடம் இருந்தது. பூக்கள், எரிந்து கொண்டிருக்கும் ஊதுபத்திகள், பாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள் இவற்றால் அவ்விடம் அழகாக இருந்தது.

முத்தவனும் கூட வந்திருந்தான். இளையமகன் வீட்டை நிரப்பவில்லை என்று குறை கூறினான். ஆனால் நடுவர்கள் இளையவனை தேர்ந்தெடுத்தார்கள் என்பதை சொல்லவும் வேண்டுமா? முட்டாள்தான் வீட்டை வைக்கோலால் நிரப்புவான். அதேபோல் ஒரு சட்டை நூலால் ஆனது என்பதை தையல்களை நீக்கி, கிழித்தா காட்ட வேண்டும்? புரிதல் இருந்தால் அறியலாமே. அது தான் மாறுதலான கண்ணோட்டம் என்பது பிரம்மனே உலகம் ஆகியிருக்கிறார் என்பதை மனதால் புரிந்து கொள்ள வேண்டும்.

## அங்க வஸ்திரம்

மாப்பிள்ளை ஒருவன் பெண் பார்க்க தன் நண்பனுடன் கிளம்பினான். மாப்பிள்ளை சற்று வறுமை நிலையில் உள்ளவன். அவனுக்கு சட்டை மேல் போட்டுக் கொள்ள நல்ல அங்கவஸ்திரத்தை நண்பனிடம் கடனாக வாங்கிப் போட்டுக் கொண்டு அந்த நண்பனையும் அழைத்துக் கொண்டு பெண் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தான். வழியில் பெண் வீட்டு கிராமவாசி இருவரையும் பார்த்தார். இருவரும் யௌவன வயதுடையவர்களாக காணப்பட்டதால் கிராமவாசிக்கே உரிய ஆர்வத்துடன் " உங்களில் யார் மாப்பிள்ளை? என்று வினாவினார். மாப்பிள்ளை நாணத்தினால் பதிலளிக்கவில்லை. நண்பன் "இந்த என் நண்பன் தான் மாப்பிள்ளை ஆனால் அவன் போட்டிருக்கும் அங்கவஸ்திரம் என்னுடையது" என்று கூறினான். மாப்பிள்ளை தன் நண்பனை முறைத்து பார்த்தான்.

சிறிது நேரம் சென்ற பின் ஒரு வயதான பெண்மணி எதிரில் வந்தவர், அதே கேள்வியை கேட்க நண்பன், அதே பதிலைச் சொன்னான். மாப்பிள்ளை எரிச்சலுடன், அங்கவஸ்திரம் உன்னுடையது என்று சொல்லாதே. அது கொஞ்ச நேரம் என்னுடையதாக இருக்கட்டும்" என்றான்.

இன்னும் சிறிது தூரம் சென்றதும் மற்றொரு கிராமவாசி அதே கேள்வியைக் கேட்க" இது தான் மாப்பிள்ளை. ஆனால் அவர் போட்டிருக்கும் அங்க வஸ்திரம் என்னுடையதல்ல " என்றான். கோபமடைந்த மாப்பிள்ளை, அந்த ஆள் அங்கவஸ்திரத்தைப் பற்றி கேட்டானா? கொஞ்ச நேரம் அதைப்பற்றி பேசாதே" என்றான்.

பெண் வீட்டிலிருந்து அவர்களை வரவேற்க வந்தவர் அதே கேள்வியைக் கேட்க நண்பன் " இது தான் மாப்பிள்ளை. ஆனால் நான் அவருடைய அங்கவஸ்திரத்தைப் பற்றி பேசமாட்டேன்" என்றான். இப்பொழுது மாப்பிள்ளை நண்பனைப் பார்த்து " நான் மாப்பிள்ளை. தயவு செய்து அங்கவஸ்திரத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாதே" என்றான்.

இன்னும் சிறிது தூரம் சென்ற பின் நிறைய கிராமப் பெண்மணிகள் எதிர்ப்பட்டனர். அவர்களில் ஒரு மூதாட்டி அதே கேள்வியை கேட்க நண்பன், " இது தான் மாப்பிள்ளை. ஆனால் அவருடைய அங்கவஸ்திரத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்றான். மாப்பிள்ளை கோபத்துடன் அங்கவஸ்திரத்தை கழற்றி நண்பன் மேல் தூக்கி எறிந்தான். இதைக் கேட்ட வயிறு வலிக்க சிரிக்கும் மக்களுடன் ஸ்வாமிஜியும் சேர்ந்து சிரிப்பார்.

நமது உண்மையான இயல்பு நிறைவும் ஆனந்தமும் தான். ஏனெனில் ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியை கேட்கும் போது நமது உடல்நிலையிலோ, வெளிச் சூழலிலோ எவ்வித மாற்றமும் இல்லாவிடினும், நாம் மனம் விட்டு சிரித்து மகிழ்கிறோம். இவ்வாறு சிரிக்கும் போது நாம் ஓர் அற்ப ஜீவன் என்ற எண்ணம் மறைந்து நமது உண்மை இயல்பான நிறைவும், ஆனந்தமும் வெளிப்படுகிறது.

# ஆசிரியர்



## என்.அவிநாசிலிங்கம்

என்.அவிநாசிலிங்கம் ஒரு சார்டர்டு அகௌண்டண்ட். மேலும் இவர் ஒரு தேர்ச்சி பெற்ற கம்பெனி செயலர் மற்றும் தகவல் சிஸ்டம்ஸ் தணிக்கையாளர்.

இவர் 1994 முதல் பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்களிடம் வேதாந்தம் மற்றும் சமஸ்கிருதம் கற்றவர்.

இவர் வேதாந்தம், சமஸ்கிருதம், மற்றும் இந்திய கலாச்சாரம் பற்றிய பாடங்களை கற்றுக் கொடுக்கின்றார்.

இவர் ஆனைக்கட்டி, ஆர்ஷ வித்யா குருகுலம் பதிப்பிக்கும் ஆர்ஷ வித்யா நீயூஸ் லெட்டர் என்ற மாத இதழில் 150க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதி உள்ளார்.

இவர் ஆர்ஷ அவிநாஷ் பவுண்டேஷன் என்ற அறக்கட்டளையின் ஸ்தாபகர் மற்றும் நிர்வாக அறங்காவலர். இந்த அறக்கட்டளையின் **www.arshaavinash.in** என்ற இணைய தளத்தை டிசம்பர் 2014ல் பூஜ்ய ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த இணைய தளத்தில் இருந்து வேதாந்தம், சமஸ்கிருத இலக்கணம் மற்றும் இந்திய காலச்சாரம் பற்றிய  நூல்களை தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இலவசமாக பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.

## இந்த இணையதளத்தைப் பார்க்கவும்:- www.arshaavinash.in

கீழ்கண்ட புத்தகங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வேதாந்தம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள் :–**

இந்திய கலாச்சாரம், யோகா, கீதை, உபநிஷத்துகள், பிரம்ம சூத்திரம் மற்றும் வேதாந்த புத்தகங்கள்.

**வேதாந்தம் பற்றிய தமிழ் புத்தகங்கள்:-**

இந்திய கலாச்சாரம் , உபநிஷத்துக்கள் மற்றும் வேதாந்த புத்தகங்கள்

**சமஸ்கிருத இலக்கண புத்தகங்கள்:-**

வேதாந்த மாணவர்களுக்காக சமஸ்கிருத இலக்கண புத்தகங்கள்

**சமஸ்கிருத பாட புத்தகங்கள்:-**

சங்கர பாஷ்யத்துடன் கூடிய கீதை, உபநிஷத்துகள், பிரம்மசூத்திரம் ஆகியவை.

**இந்திய கலாச்சாரம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள்:-**

இந்திய கலாச்சாரம் மற்றும் யோகா பற்றிய புத்தகங்கள்

**இளைஞர்களுக்கான புத்தகங்கள்:-**

யோகா, இந்திய கலாச்சாரம், சுயமுன்னேற்றம் ஆகிய தலைப்புகளில் ஆங்கிலப் புத்தகங்கள்

**குழந்தைகளுக்கான புத்தகங்கள்:-**

இந்திய கலாச்சாரம் பற்றிய ஆங்கிலப் புத்தகங்கள்.

**வேத பாராயணப் புத்தகங்கள்:-**

வேத பாராயணங்கள் ஸமஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழி எழுத்துகளுடன்.

**கட்டுரைகள்:–**

இந்திய கலாச்சாரம், வேதாந்தம் பற்றிய கட்டுரைகள் ஆங்கிலத்தில்.

**ஆன்லைன் வினாடி– வினாவில் பங்கெடுக்கலாம்:-**

கீதை, உபநிஷத்துக்கள் , பிரம்மசூத்திரம் ஆகியவற்றில் ஆன்லைன் வினாடி– வினா.

**ஆர்ஷ அவிநாஷ் பவுண்டேசன்**

104, 3வது வீதி, டாடாபாத், கோயமுத்தூர் – 641012

போன் – 9487373635

ஈ மெயில் :- arshaavinash@gmail.com

www.arshaavinash.in